Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.II,
Tindivanam.

**CASE NO:C.C.78/2020**
**Prosecution witness – PW –5**

**DATE : 22.07.2025**

Name : திரு.விநாயகம் , Caste :

Father'S Name: த/பெ.முத்துசாமி Calling :

Village : திண்டிவனம் Religion:

Taluk : Age :61

( எதிரி ஆஜரில்லை, குவிசமு மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது)

**முதல் விசாரணை**

1. நான் ஒலக்கூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து பணி ஓய்வு பெற்று இருந்து வருகிறேன். கடந்த 28.05.2020 11.30 மணிக்கு பிரம்மதேசம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது திண்டிவனம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற மருத்துவ தகவலின் அடிப்படையில் மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த முன்னூர் கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் சக்திவேல் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று 13.30 மணிக்கு நிலையம் வந்து நிலையக்குற்ற எண்.419/2020, ச/பி.294(பி), 323, 324, 506(2) இதசப்படி வழக்கு பதிவு செய்தேன். பின்னர் அதன் அசலை கனம் நீதிமன்றத்திற்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை வழக்கு கோப்புடன் இணைத்து உதவி ஆய்வாளரின் விசாரணைக்காக வைத்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** உதவி ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை –** இல்லை.

//திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்